புதினம் தெரியுமோ?

Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

03.11.2020 செவ்வாய்க்கிழமை


மந்திரிச்ச தண்ணிப் பானையால சுகாதார அமைச்சரை கொழும்பு அரசியல்வாதியளும், மீடியாக்களும் நக்கல டிச்சு முடியேலை. அதுக்குள்ள , நான் தண்ணிக்க தாண்டு போனாத்தான் கொரோனா ஒழியுமெண்டா

2



# கடலில் நான் மூழ்கினாலும் கொரோனாவை ஒழிப்பேன்

## சுகாதார அமைச்சர் சூளுரை

கொழும்பு, நவ. 3

'கொரோனா வைரஸ் தாக்கத்தின் 2ஆவது அலையை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் சாதகமான முறையில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. முதல் இரு அலைகளையும் வெற்றிகரமாக எதிர்கொண்டது போல 3 ஆவது அலையையும் கட்டுப்ப டுத்து வோம்' என்று சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்

2

## சிப்பாய் உயிரிழப்பு

திருமலை,நவ.3

சீனன்குடா விமானப் படை முகாமில் கடமையாற்றிய சிப்பாய் ஒருவர், மாடியிலிருந்து வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் இன்று செவ்வாய்க்

2



# பட்டினிச் சாவுக்குள் மக்களைத் தள்ளோம்

## முடக்காமைக்குக் காரணம் அதுவேதான் என்கின்றார் இராணுவத் தளபதி சவேந்திர

கொழும்பு, நவ. 3

நாட்டின் பொருளாதாரத்தைக் கருத்தில் கொண்டுதான் நாட்டை முடக்கவில்லை. பட்டினிச் சாவுக்குள் மக்களைத் தள்ளிவிடக் கூடாது என்பதற்காகத்தான் இதுவரை நாட்டை முடக்காதுள்ளோம்'– என்றுதெரிவித்தார்கொரோனாத் தடுப்புக் கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா.

2

## கொரோனா பலி 23!

### வயோதிபப் பெண்கள் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 3

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர். கொழும்பு மாவட்டத்தைச்

2

## அரசியல் ஆயுதமாக கொரோனா

### அரசுக்கு எதிராக சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 3

'அரசியல் இலக்குகளை அடைவதற்காகவும், இனவாதத்தை பரப்புவதற்காகவும் இந்த அரசு கொரோனா வைரஸ் விவகாரத்தை பயன்படுத்திவருகின்றது. 2ஆம் அலையைக் கட்டுப்படுத்துவதற்கான அரச பொறிமுறை

2

## முப்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் 1,082 பேர் தனிமை

கொழும்பு, நவ. 3

கொரோனா பெருந்தொற்றைத் தடுப்பதற்காக நாட்டில் முப்படையினரால் பராமரிக்கப்பட்டு வரும் 35 தனிமைப்படுத்தல் நிலையங்களில் ஆயிரத்து 82 பேர் தனிமைப்படுத்தலில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். அத்தோடு

2

## மூட நம்பிக்கைகள் வேண்டாம் மருத்துவத்தைப் பின்பற்றுங்கள்!

### பௌத்த பிக்குகள் கோரிக்கை

கொழும்பு, நவ. 3

நாடு கொரோனாப் பரவலை எதிர்நோக்கி இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் மூட நம்பிக்கைகளின் பின்னால் செல்லாது, மருத்துவ ஆலோசனைகளைப் பின்பற்றி விழிப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்று பௌத்த பிக்குமார் இலங்கை மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். மாய மந்திரங்கள், தெய்வசக்திகள் உட்பட வேறு வழிபாடுகள் மூலம் கொரோனா வைரஸை ஒழிக்க முடியும் என்ற நம்பிக்கையை பௌத்த

2



## காத்தான்குடியில் பெரும் தீ விபத்து

மட்டக்களப்பு, நவ. 3

மட்டக்களப்பு - காத்தான்குடியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் இன்று ஏற்பட்ட பெரும் தீ விபத்தில் பலசரக்குக் கடையொன்று முற்றாக எரிந்து நாசமானது.

2

## பணமோசடி; யுவதி கைது



கிளிநொச்சி, நவ. 3

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய யுவதியொருவர் வவுனியா கந்தபுரத்தை சேர்ந்த இளைஞரொருவரிடம்

2



## கடல் திரும்பும் திமிங்கிலங்கள்

கொழும்பு, நவ. 3

பாணந்துறை கடற்பகுதியில் கரையொதுங்கிய சுமார் 100 திமிங்கலங்களை மீண்டும் ஆழ்கடலுக்குள் திருப்பி அனுப்பும் செயற்பாடு

2

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

சுடர் ஒளி
மாலைப்பதிப்பு

# கடலில் நான்...

இன்று உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

‘ இலங்கையில் பலமானதொரு சுகாதார கட்டமைப்பு இருப்பதாலேயே சவால்களை எதிர்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. அதனை மேலும் பலப்படுத்தவேண்டும். அதற்கான ஒழுங்குவிதிகளே இன்று முன்வைக் கப்பட்டுள்ளன.

நான் காலை 8.30 மணிக்கு அமைச்சுக்கு சென்றால், இரவுவரை அங்கிருந்து நடவடிக் கைகளை முன்னெடுத்து வருகின்றேன். விஞ் ஞானபூர்வமாகவே முடிவுகள் எடுக்கப்படு கின்றன. மருத்துவத் துறையில் உள்ள துறைசார் நிபுணர்களின் பரிந்துரைகளின்படி முடிவுகளை எடுக்குமாறு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் பணிப்புரை விடுத்துள்ளனர். எனவே, அரசியல் ரீதியாக எந்தவொரு முடிவும் எடுக்கப்படுவதில்லை. அதே வேளை, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்து செயற்பட்டாலும் ஆன்மிகம் மீதும் நம்பிக்கை உள்ளது. வைரஸ் பரவலில் இருந்து நாட்டையும், மக்களையும் பாதுகாக்க சர்வ மதத் தலைவர்களும் ஆன்மிக நடவடிக்கை யில் ஈடுபட்டுவருகின்றனர். நேரம் இருக்கும் போது அதற்கும் ஒத்துழைப்பு வழங்கிவருகின் றேன். இந்நிலையில் புனிதநீர் அடங்கிய மண் குடத்தை நான் ஆற்றில் போட்டது தொடர்பில் சமூகவலைத்தளங்களில் விமர்சிக்கப்படு கின்றது. பவித்ரா கடலில் மூழ்கி விட்டார் என் றெல்லாம் கூறப்படுகின்றது. பரவாயில்ல, நான் கடலில் மூழ்கினால் கொரோனா ஒழியுமெனில் அதனை யும் செய்வதற்கு தயார்’ என்றார். (ம-44)

## புதினம் தெரியுமோ?

அதுக்கும் நான் ரெடி எண்டு அம்மணி வீரவசனம் பேசி இருக்கிறா.

ஆனா உண்மையா அவா ஒரு அம்பு மட்டுமே. எய்தவை பெரிய இடத்துக்காரர். வழக்க மாவே பெரிய சால்வைக்காரருக்கு உந்தப் பில்லி சூனியம், சாத்திரம் இதுகளில கடும் நம்பிக்கை. ஒருக்கா சாத்திரம் பிழைச்சுத்தான் 2015 இல ஆள் கவிண்டு கொட்டுண்டவர். அப்பிடி இருந்தும் பெருஞ்சால்வைக்காரர் இன்னனும் உந்தச் சாத்திரம்,சடங்கிலதான் மூழ்கிக் கிடக்கிறா ராம்.

கொரோனா எல்லை மீறிப்போறதால, அதுக்கு என்ன வழி எண்டு தன்ர ஆஸ்தான சாத்திரியை ஐயா கேட்டிருக்கிறார் . அந்தச் சாத்திரி சொன்னதுதான் உந்த மந்திரிச்ச தண்ணி.

அதை வேற ஆரும் கொண்டுபோய் கரைக் காம அதுக்குப் பொறுப்பான, விஞ்ஞா னத்தை நம்பவேண்டிய சுகாதார அமைச்சர் மூடநம்பிக்கையில் ஈடுபாடா இருக்கிறதைத் தான் சனத்தால ஜீரணிக்க ஏலாம இருக்கு. பாவம், அவாவும் என்ன செய்வா? மேலிடம் சொல்றதை தானே செய்ய வேணும்?

-பட்சி

# சிப்பாய்...

கிழமை அதி காலை நடந்துள்ளது.

உயிரிழந்தவர் குருநாகல் கல்கமுவப் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய பிரியதர்ஷன என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. இது தொடர்பில் சீனன்குடா பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (க-இ)

# கொரோனா...

சேர்ந்த வயோதிபப் பெண் களே இறந்தவர்களாவர். இதன்படி இலங்கையில் கொரோனா வைரஸால் உயிரிழந்தோரின் எண் ணிக்கை 23ஆக அதிகரித் துள்ளது.

கொழும்பு தேசிய மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த கொழும்பு, கொட் டாஞ்சேனைப் பகுதியைச் சேர்ந்த 68 வயதுடைய பெண்ணும், கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த 81 வயதுடைய பெண்ணுமே உயிரிழந்தவர்கள். (ம22)

# முப்படையினரின்...

இன்று காலை 29 பேர் கட்டார் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத் தில் இருந்து நாடு திரும்பியுள்ள னர். அவர்களும் மேற்படி தனி மைப்படுத்தல் மையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (ம-இ)

# கடல் திரும்பும்...

இன்று காலை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

நேற்று மாலை ஆரம்பிக்கப்பட்ட திமிங்கலங்களை திருப்பி அனுப்புவதற் கான செயற்பாடுகள் இன்று அதி காலை 3 மணியளவில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. பலத்த அலைகள் காரணமாக கடலுக்குள் திருப்பி அனுப் பும் திமிங்கலங்கள் மீண்டும் கரையொ துங்குவதனால் இந்த செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன.

எனினும் தற்சமயம் அலைகளின் தாக்கம் குறைவடைந்துள்ளமையினால் இலங்கை கடற்படை, கடலோர காவல்படை, சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் பல தன்னார்வலர்கள் இணைந்து திமிங்கலங்களை திருப்பி அனுப்பும் செயற்பாடுகளை ஆரம்பித் துள்ளனர். (மஇ)

# பட்டினிச்...

சுடரொளிக்கு இன்றுகாலை பிரத்தியேகமாகக் கருத்துத் தெரி விக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர். சவேந்திர மேலும் தெரிவித்ததாவது:

'மேல் மாகாணத்தில் கொரோனாப் பரவல் அதிகரித்ததால் அந்த மாகாணத்தை முடக்கியுள்ளோம். ஏனைய மாகாணங்க ளில் சில கிராமங்கள் மட்டும் முடக்கப்பட்டுள்ளன. கொரோ னாக் கொத்தணிப் பரவலைத் தடுக்கும் வகையிலேயே இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளோம்.

முழு நாட்டையும் முடக்கினால் நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்படும். அதனைக் கருத்தில்கொண்டே நாம் செயற்படுகின்றோம். கொரோனாவால் ஏற்படும் உயிரிழப்புக் கள் ஒரு புறமிருக்கப் பட்டினியால் மக்களைச் சாகடிக்க நாம் விரும்பவில்லை. நாட்டை முழுமையாக ஏன் முடக்கவில்லை என்று கேட்பவர்களிடம் இந்தப் பதில் கருத்தைச் சொல்ல விரும்புகின்றோம். எனினும், கொரோனா எல்லை மீறிச் சென்றால் முழு நாட்டையும் முடக்குவது தவிர்க்க முடியாது. இந்த நிலைமை ஏற்படாமல் இருக்க மக்களின் ஒத்துழைப்பு எமக்கு மிகவும் அவசியமாகும் என்றார். (ம-22)

# பணமோசடி;...

11 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பணமோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப் பட்டுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கட்டார் நாட்டில் தொழில் செய்துவரும் இளைஞரிடம் மேற்படி யுவதி வீடு கட்டுவதற் கென 11 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவை கடனடிப்படையில் பெற்றுள்ளார் என்று தெரிவிக் கப்படுகின்றது.

எனினும் யுவதி அதைத் திருப் பிச் செலுத்தாததை அடுத்து இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாரிடத்தில் முறையிட்டு குறித்த யுவதி கைது செய்யப்பட்டார். யுவதியை நீதிமன்றத்தில் முற்ப டுத்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. (மரி1)

# காத்தான்குடியில்...

மட்டக்களப்பு மாநகர தீயணைப்புப் படையினரும், பொதுமக்களும் தீயைக் கட்டுப்படுத்த பெரும் சிரமங்களை எதிர்கொண்ட போதிலும் சுமார் ஒரு மணிநேரமாகத் தீயைக் கட்டுப்படுத்த முடியவில்லை. மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையமான குறித்த வர்த்தக நிலையம் எரிவாயு முகவர் நிலையமுமாகும். இதனால் அயல்வாசிகள் தமது வீடுகளை விட்டு சில மணிநேரம் வெளியேறியதை யும் அவதானிக்க முடிந்தது. (ம-150)



# மூட நம்பிக்கைகள்...

தர்மம் ஏற்றுக்கொள்ளாது என தென்னி லங்கையின் பிரதான சங்க நாயக்கர் கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித் துள்ளார்.

“பௌத்த தர்மம் அப்படியானவற்றை செய்யுமாறு மக்களைத் தூண்டாது. இவை மூட நம்பிக்கை.

வணங்குதல், பூஜைகளை செய்தல், ஊர்வ லங்களை நடத்துதல் பௌத்த தர்மத்தில் உள்ளவை அல்ல. இவை காலத்துடன் ஏற்பட்ட கலாசார விடயங்கள். பௌத்த தர்மத்துக்கு அமைய இந்த சந்தர்ப்பத்தில் விழிப்புடன் செயற்பட வேண்டும். பௌத்த தர்மத்தின் பெறுமதியான படிப்பி னைகளைச் செயற்பாட்டு ரீதியாக மேற் கொள்ள மக்களை ஊக்குவிக்க வேண்டியதே தற்போது செய்யப்பட வேண்டியது - என் றும் அவர் மேலும் தெரிவித்தார். (மஇ)

# அரசியல் ஆயுதமாக...

தோல்விகண்டுள்ளது' என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றுகையி லேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்த முகக்கவசம் அவசியம் என ஆரம்பத்தில் வலியு றுத்தினோம், தேவையில்லை என அரச தரப்பில் விளக்கமளிக்கப்பட்டது. ஆனால் இன்று அது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோல ஆன்மிக நடவடிக்கையை மதிக்கின் றோம். சுகாதார அமைச்சரும் புனிதநீரை ஆற்றில் போட்டுள்ளார். ஆனால் அதனை செய்வதற்கு முன்னர் மூச்சியக்கி இயந்திரங்களை இறக்குமதி செய்திருக்கலாம், அவசர சிகிச்சை பிரிவுகளுக்கு தேவையான கட்டில்களை தயார்படுத்தியிருக்க லாம். நாட்டிலுள்ள மூச்சியக்கி இயந்திரங்கள்கூட இலவசமாக கிடைக்கப்பெற்றவை.

அதேவேளை, பொதுத்தேர்தலில் வெற்றிபெறுவ தற்கும், 20ஆவது திருத்தச்சட்டவரைபை நிறை வேற்றிக்கொள்வதற்கும் என அரசியலுக்காக இந்த அரசு, கொரோனா வைரஸ் விவகாரத்தை பயன்ப டுத்தியது.

கிராமங்கள் முடக்கப்படுகின்றன. ஆனால் இன்னும் சமூகத்தொற்று இல்லை என சுகாதார அமைச்சர் கூறும் நிலையே தொடர்கின்றது. எனவே, கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்ப டுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம் உருவாக் கப்படவேண்டும். அதற்கு நிபந்தனையற்ற ஆதரவை நாம் வழங்கத் தயார்' என்றார். (மஇ44)

# பொருளாதார நிலையங்கள் நாளை முதல் இயங்கும்

கொழும்பு, நவ.3

மேல் மாகாணத்தில் தனிமைப் படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அங்கு மூடப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையங்களை நாளை திறப்பதற்கு, விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாளை முதல் இந்தப் பொருளாதார மத்திய நிலையங்களைத் திறப்பதற்கும், அங்கிருந்து மொத்த விற்பனைகளை மாத்திரம் மேற்கொள்வதற்கும், விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

இரத்மலானை, நாரஹேன்பிட்டி, போகுந்தர பகுதிகளிலுள்ள பொருளாதார மத்திய நிலையங்களின் ஊழியர்களை, இன்று பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னரே, இந்த மத்திய நிலையங்களைத் திறப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ற-இ)

## மேலும் பல இடங்கள் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, நவ.3

நாட்டில் மேலும் பல பகுதிகள் தனிமைப் படுத்தல் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி கேகாலை மாவட்டத்தில் ஹெம்மாதகம, மாவனெல்லை, புளத்கொஹுபிடிய ஆகிய பொலிஸ் வலயங்கள் மற்றும் கலிகமுவ பிரதேச சபை எல்லைப்பகுதிக்கு உட்பட்ட பகுதியும் குருநாகல் மாவட்டத்தில் கிரிஉல்ல பொலிஸ் வலயமும் நேற்று மாலையிலிருந்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரையின் அடிப்படையில் தனிமைப்படுத்தல் பிரதேசங்களாக பெயரிடப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் அறிவித்துள்ளது. (வ-இ)

## காட்டு யானை தாக்கி வயோதிபப் பெண் பலி

வில்பத்து, நவ.3

காட்டு யானை தாக்கி வயோதிபப் பெண் ஒருவர் (வயது 75) உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் வில்பத்து வனப் பகுதிக்கு அண்மையிலுள்ள ஹொரிவில ஹுனுவிலகம கிராமத்தில் நேற்று இடம் பெற்றுள்ளது.

இதேவேளை, கடந்த மூன்று தினங்களுள் காட்டு யானை தாக்கி நால்வர் உயிரிழந்துள்ளனர். காட்டு யானைப் பிரச்சினைகள் தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் பல முறை கோரிக்கை விடுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனகிராமத்தவர்கள் தெரிவித்துள்ளனர். (ந-இ)

## தனிமைப்படுத்தப்பட்டுள்ளோர் சி.ஐ.டியினரின் கண்காணிப்பில்

*எச்சரிக்கிறார் அஜித் ரோஹண*

கொழும்பு, நவ.3

தனிமைப்படுத்தப்பட்டுள்ளோரின் வீடுகளின் அருகில் புலனாய்வுப் பிரிவினர் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். பொலிஸ் தலைமையகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.
வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளோர் வெளியில் சுற்றித்திரிவது தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளன. அவை தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளோம். அவர்களின் வீடுகளின் அருகில் கிராம சேவகர்களின் உதவியுடன் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டோர் தொடர்பான தகவல்களைத் திரட்டுவர். அவர்கள் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிச் செயற்பட்டால் சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கு அமையவும், தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு அமையவும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)





## தம்புள்ளவில் 3 மில்லியன் கிலோ மரக்கறிகள் தேக்கம்

கொழும்பு, நவ.3

தம்புள்ள பொருளாதார மையத்தில் சுமார் மூன்று மில்லியன் கிலோ மரக்கறிகள் தேங்கியுள்ளன என்று தம்புள்ள பொருளாதார மையத்தின் வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் சன்னா அரவ்வல தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனாப் பரவல் காரணமாக, கொழும்பு மெனிங் சந்தை மற்றும் மீகொட விசேட பொருளாதார மையம் போன்ற பல பொருளாதார மையங்கள் மூடப்பட்டுள்ளதால், விவசாயிகள் அதிக அளவு காய்கறிகளை தம்புள்ள பொருளாதார மையத்துக்கே கொண்டு வருகின்றனர்.

இதனாலேயே இந்தத் தேக்க நிலைமை ஏற்பட்டுள்ளது என்று தம்புள்ள பொருளாதார மையத்தின் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (ற-இ)

## ஊரடங்கு மீறல்; ஒரு நாளில் 180 பேர் கைது

கொழும்பு, நவ.3

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேர காலப் பகுதியில் 180 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இக் காலப் பகுதியில் 25 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். ஒக்ரோபர் 4 ஆம் திகதி முதல் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய ஆயிரத்து 992 நபர்கள் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர். 307 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அதேநேரம் கடந்த நான்கு நாள்களில் முகக் கவசம் அணியத் தவறியமை மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றத் தவறியமை ஆகிய குற்றச்சாட்டுகளில் 73 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

## 'பீட்ஸா' விநியோக நபரிடம் கொள்ளையிட்டோர் கைது!

கொழும்பு, நவ.3

பீட்ஸா 'ஓடரை 'விநியோகம் செய்து வரும் நபரை வழிமறித்து கொள்ளையிட்ட நான்கு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். சிரமமான முகவரிகளைக் கூறி பீட்ஸாவை ஓர்டர் செய்து, அதை விநியோகம் செய்ய வரும் நபரிடம் பணம் உள்ளிட்ட பொருள்கள் மற்றும் பீட்ஸா உணவு என்பவற்றை இவர்கள் கொள்ளையிட்டனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தலங்கம பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனத் தெரியவருகின்றது. கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 8 கிராம் நிறையுடைய ஹெரோய்ன் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-இ)

# அரசின் வைரஸ் ஒழிப்பு நடவடிக்கைக்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும்

### முன்னாள் சபாநாயகர் கரு கோரிக்கை

கொழும்பு,நவ.3

நாட்டில் வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஆதரவளிக்கவேண்டும் என முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"நாட்டு மக்களினது பாதுகாப்பை



உறுதி செய்யவேண்டியது அனைவரதும் கடமை. 20வது திருத்தத்தின் பின்னர் இலங்கை மிகவும் வலுவான நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியைக் கொண்டுள்ளது. இந்நிலையில் '20' மூலம் கிடைத்துள்ள தனது அதிகாரங்களை வைரஸ் ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக ஜனாதிபதி பயன்படுத்த வேண்டும் "எனவும் முன்னாள் சபாநாயகர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ந -இ)

# அத்தியாவசியப் பொருள்கள் இன்று முதல் விநியோகம்

கொழும்பு, நவ.3

ஊரடங்கு அமுலாகியுள்ள கொழும்பு, கம்பஹா, களுத் துறை ஆகிய மாவட்டங்களில் உணவு உள்ளிட்ட அத்தியாவசி யப் பொருள்களை விநியோகிப்ப தற்கான வேலைத்திட்டங்கள் இன்றுமுதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இதற்கமைய, ச.தொ.ச உள் ளிட்ட அனைத்து பல்பொருள் அங்காடிகள் ஊடாக பொதுமக் களுக்குத் தேவையான அத்தியா வசிய பொருள்களை பொதுமக்க ளுக்கு வழங்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது. இதேவேளை வட்ஸ்அப், தொலைபேசி மற்றும் இணைய முறைமை ஊடாக பொருள்களை முற்பதிவு செய்து அவற்றை பெற்றுக் கொள்ள முடியும் என பல் பொருள் அங்காடி வலையமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன், புறக்கோட்டை பகுதியில் நாளை அதிகாலை 5 மணிமுதல் மொத்த விற்பனை வர்த்தக நிலையங்கள் திறக்கப் படவுள்ளன.

ஊரடங்குச் சட்ட அனுமதிப்பத் திரத்தைப் பெற்று அத்தியாவசி யப் பொருள்களை கொள்வனவு செய்யவருமாறு வர்த்தகர்களி டம் வர்த்தக சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை. கொழும்பு உள்ளிட்ட ஊரடங்குச் சட்டம் அமுலாகியுள்ள ஏனைய பிரதே சங்களில் வெதுப்பக உற்பத்தி களை நடமாடும் வாகனங்கள் ஊடாக விநியோகிப்பதற்கு வாய்ப்பைப் பெற்றுத்தருமாறு அகில இலங்கை வெதுப்பக உற்பத்தியாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரியுள் ளது. (ந இ)



# சுகாதார அமைச்சரா? மந்திரவாதியா?

## கிண்டலடிக்கிறார் மங்கள

கொழும்பு, நவ.3

நாட்டில் கொரோனாப் பரவல் தீவர மடைந்து வரும் நிலையில் சுகாதார அமைச் சர் மந்திரவாதி மருத்துவரின் ஆலோச னைக்கு ஏற்ப செயற்படுகிறார். இதனால் சர்வதேசத்தின் மத்தியில் நாடு நகைப்புக் குள்ளாகியுள்ளது என்று முன்னாள் நிதிய மைச்சர் மங்கள சமரவீர குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொரோனாப் பரவலை தடுப்பதற்கு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியா ராச்சியும் மேலும் சிலரும் மதரீதியான சடங்கில் ஈடுபடும் புகைப்படங்கள் நேற்று முன்தினம் வெளியாகின. இது தொடர்பில் கருத்துரைத்த ருவிட்டர் பதிவில் மங்கள இதனைத் தெரிவித்துள் ளார். விஞ்ஞானத்தை நம்புகின்ற பகுத்த றிவுள்ள மனிதரான ஜனாதிபதி கோத்தா பய ராஜபக்ச, சர்வதேசத்தின் மத்தியில் எமது நாட்டை நகைப்பிற்குரியதாக மாற்றும் வகையிலான தனது அமைச்சர்க ளின் செயற்பாடுகளைத் தடுக்க நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

# 44 பாக். கைதிகள் இன்று கையளிப்பு!

கொழும்பு, நவ.3

போதைப்பொருள் தொடர்பான பல்வேறு குற்றங்களுக்காக இலங்கை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப் பட்டுள்ள பாகிஸ்தான் கைதிகள், பாகிஸ்தான் சிறைச்சாலை அதிகாரிக ளிடம் இன்று ஒப்படைக்கப்படவுள்ள னர் என்று சிறைச்சாலைகளின் ஆணை யாளர் துஷார உபுல்தெனிய தெரிவித் துள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்தே இந்தக் கைதி கள் பாகிஸ்தான் சிறைச்சாலை அதிகா ரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

பாகிஸ்தானுக்கும், இலங்கைக்கும் இடையில் குற்றவாளிகளைப் பரிமா றுவது தொடர்பான 2004 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தக் கைதிகள் ஒப்படைப்பு இடம்பெறுகிறது. (ற-இ)




## மினுவாங்கொட கொத்தணி

# 2 இலட்சத்துக்கும் அதிகமான பி.சி.ஆர்.

கொழும்பு, நவ.3

மினுவாங்கொட கொவிட்19 கொத்தணியுடன் தொடர்புடைய சுமார் 2 இலட்சம் பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளது என்றும், இதில் 3.6 வீதமானவர்களே நோய்த் தொற்றுக்கு இலக்காகி யுள்ளனர் என்றும் புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

கொவிட்-19 நோய்த் தடுப்பு குறித்த தேசிய நிலையத் தால் இந்தப் புள்ளி விபரத் தகவல் வெளியிடப்பட்டுள் ளது. மினுவாங்கொட கொரோனாக் கொத்தணி யுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் இதுவரை 207,819 பி.சி.ஆர் பரிசோதனைகள் நடத்தப்பட் டுள்ளன.

இதுவரையில் 206,422 பி.சி.ஆர் பரிசோதனை முடிவு கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதில், 7ஆயிரத்து 582 பேருக்கே கொவிட்-19 வைரஸ் தொற்று உறுதிசெய் யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ற-இ)

# வெளிநாடுகளில் வசிப்போரின் காணிகளைச் சுவீகரிக்கின்ற குழு தொடர்பில் விசாரணை!

கொழும்பு, நவ. 3

வெளிநாடுகளில் வசிப்போரின் காணிகளை சுவீகரிக்கும் அரசியல் பின்புலமுள்ள குழு தொடர்பாக விசாரணை நடத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பதில் பொலிஸ் மா அதிபருக்கு சட்டமா அதிபர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார் என சட்டமா அதிபரின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த குழு தொடர்பான விபரங்கள் அண் மையில் சமூகவலைதளங்களில் காணொளி ஆதாரத்துடன் வெளியாகியமையும் குறிப்பி டத்தக்கது. (ம-இ)

# தனிமைப்படுத்தலில் ராஜித சேனாரத்ன?

கொழும்பு, நவ.3



முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தனது குடும்பத்தின ருடன் தனிமைப்ப டுத்தப்பட்டிருந்தார் எனத் தெரிவிக்கப் பட்டுள் ளது.

மேல் மாகாணத்தில் தனிமைப்ப டுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்ட காலத்தில், இவர் கள் அறுகம்பை பிரதேசத்துக்குச் சுற்றுலா சென்ற காரணத்தால் அவர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து, பொத்துவில் அறுகம்பைக்கு இடையில் உள்ள ஹொட்டல் ஒன்றில்அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனரெ னத் தெரியவந்துள்ளது.

தற்போது, முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன உட்பட அவ ரது குடும்பத்தினர் தனிமைப்படுத் தலில் இருந்து விடுக்கப்பட்டு, கொழும்பு திரும்பியுள்ளனர் என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந- இ)

# நடைமுறைகளை மீறுவதால் நாட்டுக்கு பெரும் ஆபத்து

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிப்பு

கொழும்பு, நவ.3

சுகாதார நடைமுறைகளை மீறுவதால் நாட்டுக்கு பெரும் ஆபத்து என எச்சரித்துள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கள் சங்கம், மேல் மாகாணத்தில் ஊரடங்கை நீடிக்கும் அரசின் தீர்மானத்தினை வரவேற்றுள் ளது. வைரஸைக் கட்டுப்படுத்து வதற்காக அரசாங்கமும் சுகாதார அதிகாரிகளும் விடுக்கும் உத்தரவு



கள் அறிவுறுத்தல்களை பொதுமக் கள் பின்பற்றவேண்டும்.

பொதுமக்கள் கொரோனா வைரஸ் விதிமுறைகளை தொடர்ந்தும் மீறுவதால் ஆரோக் கியமான நிலையில் உள்ள மக்க ளும் பாதிக்கப்படும் நிலைமை உருவாகும்.

இது நாட்டின் சுகாதாரத்துறைக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் "என பொதுச் சுகாதாரப்பரி சோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல்ரோகண தெரிவித்துள் ளார். (ந -இ)

# பருவம் தப்பிய மழையால் 5000 ஏக்கர் நெல் வயல் நாசம்

மன்னார்,நவ 3

மன்னார் மாவட்ட விவசாயிகள் இந்த வருட பெரும்போக பயிர்ச் செய்கை புழுதி விதைப்பை பெரும் எதிர்பார்ப்புடன் மேற்கொண்டிருந்தார்கள். இந்நிலையில் உரிய காலத்தில் மழை பெய்யாததால் அவர்கள் பெரும் நஷ்டம் அடைந்துள்ளார்கள்

“மாவட்டத்தில் நானாட்டான், முசலி மாந்தை மேற்கு மடு போன்ற பிரதேசங்களில் கிட்டத்தட்ட ஐயாயிரம் ஏக்கருக்கும் அதிகமான காணிகளில் புழுதி விதைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. விதைக்கப்பட்ட விதை நெல் வீணாகி



எமக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது .

கடன்களைப் பெற்றே புழுதி விதைப்பு விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டோம். எனவே அழிவடைந்துள்ள அளவிற்கு விதை நெல்லைப் பெற்றுக்கொடுப்பதற்கு விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று மன்னார் மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-213)

## பாழடைந்த வீட்டுக்குள் ஆணொருவரின் சடலம்

திருகோணமலை, நவ.3

திருகோணமலைபாலையூற்று பகுதியில் புகையிரத திணைக்களத்துக்குச் சொந்தமான பாழடைந்த விடுதிக்குள் ஆண் ஒருவரின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை மஹமாயபுர மட்கோ பகுதியைச் சேர்ந்த மீன் வியாபாரியான ஏ. பீ. விஜயபால (67வயது) என்பவரே சடலமாக இன்று காலை மீட்கப்பட்டார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக திருகோணமலை பொலிஸார் தெரிவித்தனர். (ந -45)

## ஊரடங்கு அற்ற இடங்களில் நிகழ்வுகளுக்கு மட்டுப்பாடு

### சுகாதார அமைச்சு ஆலோசனை

கொழும்பு, நவ.3

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படாத பிரதேசங்களில் இடம்பெறும் நிகழ்வுகளில் கட்டுப்பாடுகளை விதிக்கச் சுகாதார அமைச்சு

ஆலோசனை வழங்கியுள்ளது. ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படாத பிரதேசங்களில் செயற்பாடுகளை மட்டுப்படுத்த வேண்டிய முறை தொடர்பில் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

“ திருமண நிகழ்வுகளில் கலந்துகொள்ள வேண்டியவர்களின் அதிகபட்ச எண்ணிக்கை 50ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மரண வீட்டில் கலந்து கொள்ள வேண்டியவர்களின் அதிகபட்ச எண்ணிக்கை 25ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆலயங்கள், விகாரைகள், தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்களில் ஒன்றுகூட அனுமதி இல்லை. வழிபாட்டு இடங்களில் பக்தர்களின் எண்ணிக்கை அதிகபட்சம் 25ஆக காணப்பட வேண்டும் “என குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-இ)

## காலி மீனவர்களுக்கு இதுவரை 2,105 பி.சி.ஆர்.

காலி, நவ.3

காலி மாவட்டத்தில் மீன்பிடித்துறையைச் சேர்ந்த 2,105 பேருக்கு இதுவரை பி.சி. ஆர். பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன என காலி மாவட்ட தொற்று நோயியல் விசேட வைத்தியர் வெனுர கே சிங்காராச்சி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பி.சி.ஆர். செய்யப்பட்டவர்களுள் 10 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது. மேலும் 402 பேரின் பரிசோதனை அறிக்கைகள் கிடைக்கப்பெறவுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந -இ)




இலங்கை கடலோர காவல்படையின் புதிய பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் அனுர ஏகநாயக்க நேற்று திங்கட்கிழமை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்னவை கடற்படை தலைமையகத்தில் சந்தித்தார். இந் சந்திப்பில் இருவரும் நினைவுச் சின்னங்களையும் பரிமாறிக்கொண்டனர். (ந-இ)

## கொரோனாத் தொற்றுக்கு வயது வேறுபாடு இல்லை

### வைத்தியர் பாலித கருணாபிரேம விளக்கம்

கொழும்பு, நவ.3

கொரோனா வைரஸ் தொற்றால் முதியவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டாலும் வைரஸ் தொற்றுவதில் வயது வித்தியாசம் தாக்கம் செலுத்தாது என சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் பணிப்பாளர் விசேட வைத்தியர் பாலித கருணாபிரேம தெரிவித்துள்ளார். ஊடக நிகழ்ச்சியொன்றில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

“கொரோனாத் தொற்று இளைஞர்களை விடவும் வயோதிபர்களுக்கு 30 மடங்கு அதிக ஆபத்தை ஏற்படுத்தும்.

நாள்பட்ட நோய் இருந்தால் அதன் பாதிப்பு மேலும் அதிகமாகும். வீட்டை விட்டு வெளியே பயணிக்கும் நபர்கள் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் மக்கள் ஒன்றுகூடும் சந்தர்ப்பங்களை முடிந்தளவு குறைத்துக் கொள்ள வேண்டும் “என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)



## கொரோனாத் தொற்று பாதிப்பு; இலங்கைக்கு 109 ஆவது இடம்

கொழும்பு, நவ.3

உலகில் கொரோனா வைரஸ் தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் கடந்த 3 நாள்களில் இலங்கை 3 இடங்கள் முன்னேறி 109 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

கொரோனாத் தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் கடந்த மாதமளவில் சுமார் 130 ஆவது இடத்தில் இருந்த இலங்கை, கடந்த வாரத்தில் சடுதியாக முன்னேறி 112 ஆவது இடத்தைப் பிடித்தது. இந்த நிலையில், கடந்த 3 தினங்களில் மேலும் 3 இடங்கள் முன்னேறி 109 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

கொரோனா வைரஸின் தாக்கம் உலகளவில் மக்களை அச்சுறுத்திவரும் நிலையில், இலங்கையிலும் அதன் பாதிப்பு தற்போது வெகுவாக அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக மினுவங்கொட மற்றும் பேலியகொட கொரோனாக் கொத்தணி காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துச் செல்கிறது.

இந்த நிலையில், நாட்டில் இதுவரை பதிவாகியுள்ள கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 11 ஆயிரத்து 335 ஆக அதிகரித்துள்ளது. (ற-இ)

## சில நாள்களில் பருவ மழை

கொழும்பு, நவ.3

இரண்டாவது பருவகால மழைக்கு ஏதுவான நிலைமைகள் உருவாகியுள்ளன. அடுத்த சில நாள்களில் பருவ மழை ஆரம்பிக்கும் எனவே மின்னல், இடியுடன் கூடிய மழையை மாலை அல்லது இரவு நேரங்களில் எதிர்பார்க்கமுடியும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஊவா, கிழக்கு, வடமத்திய மற்றும் மத்திய மாகாணங்களில் நாளை பிற்பகல் மணிக்குப் பின் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

மிகவும் கடுமையான மழையை சில இடங்களில் எதிர்பார்க்கலாம் சேதங்களைக் குறைக்க போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# நீர்த்தேக்கங்களின் நீர்மட்டத்தில் வீழ்ச்சி

கொழும்பு, நவ.3

நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு உரித்தான நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 32 வீதமாக குறைவடைந்துள்ளது.

பெரும்போக செய்கையை ஆரம்பிக்குமாறு விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்ட போதிலும், நீர்நிலைகளிலுள்ள நீரின் மட்டமானது மேலும் ஒரு மாதத்துக்கே போதுமானது என நீர்ப்பாசன திணைக்களத்தின் நீர்முகாமைத்துவப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, மகாவலித் திட்டத்தின் கீழுள்ள நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் குறைவடைந்துள்ளது. மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 38 வீதமாகவும் உடவளவ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 37 வீதமாகவும் குறைவடைந்துள்ளன. எனினும் விக்டோரியா, கொத்மலை, ரந்தெனிய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 65 வீதமாக காணப்படுகின்றன என நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது. (ந-இ)

# பாண் விநியோகத்தின்போது கொரோனா பரவும் அபாயம்!



## பாணை பொதி செய்யுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.3

கொரோனா வைரஸ் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கு பாண்களை விநியோகிக்கும்போது அவற்றைப் பொதி செய்து விநியோகிக்குமாறு சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது;

வெதுப்பகங்களில் இருந்து பெட்டிகளிலோ, முச்சக்கரவண்டிகளிலோ பாண்களைக் கொண்டு செல்பவர்கள் வெறும் கைகளாலேயே பாணை எடுத்து விநியோகிக்கின்றனர். கிராமங்களில் கடைகளுக்குப் பாண் விநியோகிக்கச் செல்வோர் பெரும்பாலும் 5 அல்லது 10 இறாத்தல் பாண் வரை கைகளில் அடுக்கி நெஞ்சோடு அணைத்தவாறு அதை கடைகளுக்குக் கொடுக்கின்றனர். முச்சக்கரவண்டிகளில் கொண்டுசெல்பவர்களும் இதே முறையையே பின்பற்றுகின்றனர்.இவர்களின் கைகள் வாகனத்தின் கைப்பிடி உட்பட பல இடங்களில் அடிக்கடி தொடுகையுறுகின்றன. மேற்படி சந்தர்ப்பங்களில் கொரோனா வைரஸ் மட்டுமன்றி ஏனைய பல நோய்க்கிருமிகளும் பொதுமக்களை நேரடியாகத் தாக்கக்கூடிய அபாயம் உள்ளது. ஒரு பாண் வெதுப்பகத்தில் உற்பத்தியாக்கப்பட்டு பொதுமக்கள் வாங்கி உட்கொள்வதற்கிடையே பலரது வெற்றுக் கைகளால் தொடுகையுறுகின்றது. தற்போதைய நிலையில் இது மிக ஆபத்தானது. வெதுப்பகத்தில் இருந்து ஒவ்வொரு பாணும் பையில் அடைக்கப்பட்டு விநியோகிப்பதை உறுதிப்படுத்த வேண்டும். ஆலயங்களில் கச்சான் விற்க பயன்படும் பைகளைப் போன்று மை தெளிக்கப்படாத கடதாசிப் பைகளில் பாண் அடைக்கப்பட முடியும். வெதுப்பக உரிமையாளர்களுக்கு சற்று சிரமம் இருக்கின்றபோதிலும் பொதுமக்கள் நலனுக்காக இதைச் செயற்படுத்த முன்வரவேண்டும். இந்த விடயத்தில் அக்கறை செலுத்துமாறு வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் மற்றும் அதிகாரிகளை சமூக ஆர்வலர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஐ)



# வன்னிக் காட்டில் அரிய வகை அரணை

வவுனியா, நவ.3

வன்னிக் காட்டுப் பகுதியில் இலங்கைக்கே உரித்தான அரிய வகை அரணை இனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஓமந்தைக் காட்டுப் பகுதிக்கு சென்ற ஒருவர் டசியா ஹலியானஸ் (Dasia halianus) உயிரியல் பெயர் கொண்ட அந்த அரணையை மரத்தில் அவதானித்த நிலையில் அதனை புகைப்படம் எடுத்துள்ளார். இந்த தனித்துவ அரணை இனம் வன்னிக் காடுகளில் இருந்தாலும் மிக அரிய வகை உயிரினமாகவே உள்ளது. பெரும்பாலும் மரங்களில் இந்த உயிரினம் வாழ்ந்து வருகின்றது. 1970 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த இலங்கையின் இரண்டு ரூபா நாணயத்தாளில் இதன் படம் அச்சிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)




# சுகாதாரப் பணியாளரையும் விட்டுவைக்காத கொரோனா

## மூன்றாம் அலையில் 50 பேர் பாதிப்பு

கொழும்பு, நவ.3

கொரோனா மூன்றாம் அலை மீண்டும் பரவத்தொடங்கிய பின்னர், 50 சுகாதாரப் பணியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அரசமருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. இது முதலாவது அலையின் போது காணப்பட்ட நிலையை விட வித்தியாசமானது என்று அச்சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த சங்கம் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் சுகாதாரத்துறை நெருக்கடியை எதிர்கொள்வதைத் தவிர்ப்பதற்கு திட்டமிடப்பட்ட முறையில் பயன்படுத்துவதற்கான பொறிமுறையொன்று அவசியம் என்று ஏற்கனவே சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் தெரிவித்துள்ளோம்.
கொரோனா வைரஸ் முதல் தடவை தாக்க ஆரம்பித்தபோது சுகாதாரப் பணியாளர்கள் தொடர்பில் எந்தப் பாதிப்புகளும் பிரச்சினைகளும் ஏற்படவில்லை. ஆனால் தற்போது அவர்கள் பெரிய நெருக்கடி நிலையைச் சந்தித்து வருகின்றனர்.

அதுமட்டுமன்றி தனிமைப்படுத்தல் காரணமாக சில மருத்துவமனைகளின் முழுப் பிரிவுகளுமே மூடப்பட்டுள்ளன இது இடம்பெறக்கூடாது எனத் தெரிவித்துள்ளது. (ந-இ)

# ஜாஎல பகுதியில் தாதிக்கு கொரோனா!

ஜாஎல ஆனியாகந்த ஆயுர்வேத மருத்துவமனையின் தாதி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து அந்த மருத்துவமனை நேற்று திங்கட்கிழமை இரவு தொடக்கம் மூடப்பட்டுள்ளது.

வத்தளையைச் சேர்ந்த குறித்த தாதி, கடந்த மாதம் 9ஆம் திகதி பேலியகொட மீன்சந்தைக்குச் சென்று வந்துள்ளார். மேலும் அங்கு பணியாற்றும் மருத்துவர்கள் உள்ளிட்ட 25 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

# 20 கிலோ கஞ்சா மன்னாரில் மீட்பு

மன்னார், நவ. 3

மன்னார் உயிலங்குளம் பகுதியில் 20 கிலோ 555 கிராம் எடையுள்ள கஞ்சா இன்று மீட்கப்பட்டது.

மன்னார் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்படி கஞ்சா மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. கஞ்சா எவ்வாறு குறித்த பகுதிக்குக் கொண்டுவரப்பட்டது. எவரால் கொண்டுவரப்பட்டது என்பது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-இ)

# கம்பஹாவில் தொற்றாளர் தொகையில் வீழ்ச்சி

கம்பஹா, நவ.3

கம்பஹா மாவட்டத்தில் கடந்த 24 மணிநேரத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் பதிவாகின்றமை கணிசமானளவு குறைவுவடைந்துள்ளது என மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் மிகார எபா தெரிவித்துள்ளார்.

மேலும், “கொரோனாவினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை நேற்று 61 ஆக பதிவாகியுள்ளது. மஹர வைத்திய அலுவலர் பிரிவிலுள்ள 25 கொரோனாத் தொற்றாளர்களும் கெலனிய வைத்திய பிரிவிலுள்ள 10கொரோனாத் தொற்றாளர்களுக்கும் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கம்பஹா மாவட்டத்தில் இதுவரை 3,195பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.கொரோனாவினால் பாதிக்கப்பட்ட 2ஆவது தரப்பினரை கண்டறிவதற்கு 48 ஆயிரத்து 211 பி.சி.ஆர். பரிசோதனைகள் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளன” என அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)

# ட்ரம்ப் - பிடென்

## வல்லரசை ஆளப்போவது யார்?

### ஆரம்பமாகவுள்ளது தேர்தல்!




வொஷிங்டன், நவ. 3

அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் இன்னும் சற்று நேரத்தில் அங்கு ஆரம்பமாகவுள்ளது. குடியரசுக் கட்சியின் வேட்பாளரான ட்ரம்ப், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான பிடென் இருவரில் எவர் அமெரிக்காவின் அடுத்த அதிபர் என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

அமெரிக்காவில் தேர்தலுக்கு முன்னதாகவே வாக்களிக்கும் பொறிமுறை உள்ளது. சுமார் ஒன்பது கோடியே 50 லட்சம் மக்கள் தத்தம் வாக்குகளைப் பதிவுசெய்துள்ளனர். கணக்கெடுப்புக்களின் படி பிடென் முன்னிலையில் உள்ளார். எனினும் தற்போதைய ஜனாதிபதியான ட்ரம்ப், தான் மீண்டும் ஜனாதிபதியாகுவேன் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ட்ரம்பின் ஆட்சியின் வெளியுறவுக் கொள்கைகள் மாற்றப்பட்டன. ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமைகள் சபை என்பவற்றுக்கான நிதியைக்கூட ட்ரம்ப் குறைத்தார். அமெரிக்கா என்ற ஒன்றைப் பலப்படுத்துவதே அவரது நோக்கமாக இருந்தது. இந்த அணுகுமுறைக்கு அமெரிக்காவிலேயே பெரும் எதிர்ப்புக் கிளம்பியது. பிடென் அதிபரானால் மீண்டும் ஜனநாயகக் கட்சியின் கொள்கைகள் அங்கு நடைமுறைப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-இ)



## வியன்னாவில் பதற்றம்

## ஆயுததாரிகள் பொலிஸார் இடையே துப்பாக்கிச் சமர்

வியன்னா, நவ. 3

ஒஸ்திரிய தலைநகர் வியன்னாவில் பொலிஸாருக்கும் ஆயுததாரிகளுக்கும் இடையில் நேற்று இரவு தொடக்கம் துப்பாக்கிச் சமர் இடம்பெற்று வருகின்றது. அதில் இதுவரை இரு பெண்கள் உட்பட நான்கு பொதுமக்களும் ஆயுததாரி ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

வியன்னாவில் யூத மத வழிபாட்டுத்தலம் ஒன்றின் அருகே நேற்று இரவு 8 மணி முதல் ஒன்றுக்கு மேற்பட்ட ஆயுததாரிகளுடன் பொலிஸார் துப்பாக்கிச் சமரில் ஈடுபட்டுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. நகரில் ஆறு இடங்களை ஆயுததாரிகள் இலக்குவைத்து தாக்கியுள்ளனர் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதலில் பொதுமக்கள் தரப்பில் 15 பேர் காயமடைந்துள்ளதுடன் பொலிஸார் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. ஒஸ்திரிய உள்துறை அமைச்சர் இது ஒரு பயங்கரவாதத் தாக்குதல் என்று தெரிவித்துள்ளார். இந்தத் தாக்குதலுக்கு பிரான்ஸ், இந்தியா, அமெரிக்கா மற்றும் துருக்கி நாட்டுத் தலைவர்கள் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர். (வ-இ)

## பல்கலையில் துப்பாகிச் சூடு: 22 மாணவர்கள் உயிரிழப்பு!

காபூல், நவ. 3

ஆப்கானிஸ்தானின் காபூல் பல்கலைக்கழகத்தில் ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 22 மாணவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அங்கு ஈரானிய புத்தகக் கண்காட்சி இடம்பெற்றுக் கொண்டிருந்தவேளை இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

கண்காட்சியைத் திறந்து வைப்பதற்கு அரசாங்க அதிகாரிகள் வருகை தரவிருந்த தருணத்தில் இந்த தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது என ஆப்கான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வ-இ)





ஜசிந்தா ஆர்டெர்னின் பன்மைத்துவ அமைச்சரவை

## வெளிவிவகார அமைச்சராக ஆதிவாசி பெண் நியமிப்பு!

வெலிங்டன், நவ. 3

மிகச்சிறந்த பன்மைத்துவம் கொண்ட அமைச்சரவையாக நியூசிலாந்தின் புதிய அமைச்சரவை அமைந்துள்ளது.

நியூசிலாந்து புதிய அமைச்சரவை விபரம் நேற்று வெளியாகியுள்ளது. பன்மைத்துவத்தைப் பிரதிபலிக்கும் வகையில் பல்வேறுபட்ட கலாச்சார பின்னணியில் உள்ளவர்களை அமைச்சரவையில் உள்வாங்கியுள்ளார் பிரதமர் ஜசிந்தா ஆர்டெர்ன். இதன்படி, வெளிவிவகார அமைச்சர் பதவிக்கு முதல் முறையாக நனய்ஆ மஹூட்டா ஆதிவாசி பெண் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய வம்சாவழிப் பெண்ணான பிரியங்கா ராதாகிருஷ்ணன் பன்முகத் தன்மை, உள்ளடக்கம் மற்றும் இன சமூகங்களுக்கான அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நியூசிலாந்தின் துணைப் பிரதமராக தன்பால் ஈர்ப்பாளர் கிரான்ட் ரோபேட்சன் நியமிக்கப்பட்டுள்ளார். புதிய அமைச்சரவை தொடர்பில் பிரதமர் ஜசிந்தா தெரிவிக்கையில், புதிய திறமையாளர்களை அமைச்சரவையில் சேர்ப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த அமைச்சரவை தகுதியை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் நம்ப முடியாத அளவுக்கு வேறுபட்டது எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

## மூன்று வயதுக்குழந்தை 3 நாள்களின் பின் மீட்பு

அங்காரா, நவ. 3

துருக்கியில் நிலநடுக்கம் ஏற்பட்டு சுமார் மூன்று நாட்களின் பின் இடிபாடுகளில் இருந்து 3 வயது பெண் குழந்தை ஒன்று நேற்று உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

துருக்கி நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 91 ஆக அதிகரித்துள்ளது. (வ-இ)



## இதயத்தையும் கொரோனா தாக்கும்



நியூயோர்க், நவ.3

கொரோனாத் தொற்றானது இதயத்தை தாக்கும் ஆபத்து உள்ளது. இதனால் மாரடைப்பு ஏற்பட்டு மரணம் கூட சம்பாதிக்கலாம் எனவும் அமெரிக்க நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். கொரோனா வைரஸ் சுவாசம் தொடர்பான தொற்றாக இருந்தாலும், இதயத் தசைகளைத் தாக்கி, இதயத்தில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என சமீபத்திய ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது. அமெரிக்காவின் சிக்காகோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் சீன் பின்னி, இதய நோயால் பாதிக்கப்பட்டவர்களின் இதயம், வைரஸால் சேதம் அடையும் ஆபத்து உள்ளது. இந்த வைரஸ் இரத்த நாளங்களில் படையெடுத்து அவற்றுக்குள் வீக்கத்தை ஏற்படுத்தக் கூடும். அதன் மூலம் இரத்தம் உறைந்து மாரடைப்பு ஏற்படக்கூடும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார். (வஇ)

# ஹாமில்டன் முதலிடம்

ரோம், நவ.3

இத்தாலியில் நடந்த பார்முலா1 கார் பந்தயத்தில் நடப்பு சம்பியனான இங்கிலாந்து வீரர் லீவிஸ் ஹாமில்டன் முதலிடம் பிடித்துள்ளார்.




இந்த ஆண்டுக்கான பார்முலா1 கார் பந்தயம் 17 சுற்றுகளாக நடத்தப்படுகிறது. 13 ஆவது சுற்றான எமிலியா ரோமக்னா கிராண்ட்பிரி பந்தயம் இத்தாலியின் இமோலா நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. 309. 049 கிலோமீற்றர் பந்தயத் தூரத்தை நோக்கி வழக்கம் போல் 10 அணிகளைச் சேர்ந்த 20 வீரர்கள் காரில் சீறிப் பாய்ந்தனர்.

அதில் நடப்பு சம்பியனான இங்கிலாந்து வீரர் லீவிஸ் ஹாமில்டன் (மெர்சிடஸ் அணி) 1 மணி 28 நிமிடம் 32.430 வினாடிகளில் இலக்கைக் கடந்து முதலிடம் பிடித்ததுடன் 26 புள்ளிகளையும் தட்டிச் சென்றார். அடுத்த சுற்றுப் போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி துருக்கியில் நடைபெறவுள்ளது. (ற)



# கெய்க்வாட்டுக்கு டோனி பாராட்டு

புதுடில்லி, நவ.3

நேற்றுமுன்தினம் நடந்த ஐ.பி.எல். ஆட்டத்தில் சதம் பெற்ற ருதுராஜ் கெய்க்வாட்டுக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் அணித் தலைவர் எம். எஸ்.டோனி பாராட்டுத் தெரிவித்துள்ளார். பஞ்சாப்புக்கு எதிரான நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை அணியின் தொடக்க வீரர் ருதுராஜ் கெய்க்வாட் அரைச் சதம் பெற்றார். இது அவர் தொடர்ச்சியாகப் பெறும் மூன்றாவது அரைச் சதமாகும். இது தொடர்பாக டோனி தெரிவித்துள்ளதாவது

ருதுராஜ் கெய்க்வாட் எப்போதுமே நன்றாக ஆடக் கூடியவர். அவரைக் கொரோனா 20 நாள்கள் முடக்கியமையால் அவரை நாங்கள் கணிக்க நேரம் இல்லாமல் போய் விட்டது.

அதனால்தான் டுபெலிசிஸ் வோட்சனை தொடக்க வீரர்களாக அனுப்பினோம். அது சரியாக அமையவில்லை. கடைசியில் ருதுராஜ் தொடக்க வரிசையில் அபாரமாக ஆடினார். இந்த ஐ.பி.எல். தொடர் மிகவும் கடினமானது. நிறைய தவறுகளைச் செய்தோம். கடைசி ஆட்டத்தை வெற்றிகரமாக முடித்ததில் பெருமை அடைகிறேன் -என்றார். (ற)

# மஞ்சள்தான் வாழ்க்கை

## சுரேஷ் ரெய்னா சூசகம்


புதுடில்லி, நவ.3

மஞ்சள்தான் வாழ்க்கை என்று சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரரான சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார்.

நடப்பு ஐ.பி.எல். சீசனில் சென்னை அணியின் நட்சத்திர வீரரான சுரேஷ் ரெய்னா இந்த முறை விளையாடவில்லை. தனிப்பட்ட காரணங்களுக்காக போட்டிகள் தொடங்குவதற்கு முன்னரே அவர் விலகிவிட்டார். அவர் இல்லாதது தான் சென்னை அணிக்கு மிகுந்த பின்னடைவாக அமைந்துவிட்டது என்று ரசிகர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

தற்போது தனியார் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த சுரேஷ் ரெய்னா மஞ்சள்தான் வாழ்க்கை என்று குறிப்பிட்டுள்ளார். இது அடுத்த ஐபிஎல் தொடரில் அவர் விளையாடுவார் என்ற நம்பிக்கையை ரசிகர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. (ற)





# ஆர்ச்சர் ஆவேசம்

புதுடில்லி, நவ.3

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் ஜோப்ரா ஆர்ச்சர் தொடர் முழுவதும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார். 14 போட்டிகளிலும் விளையாடிய ஆர்ச்சர் 20 இலக்குகள் வீழ்த்தி முதல் 6 பேர் பட்டியலில் உள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட அணிகளில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியும் ஒன்று. முதல் இரண்டு போட்டிகளில் ஸ்மித், சஞ்சு சாம்சன் அபாரமாக விளையாட, ஜோப்ரா ஆர்ச்சர் சிறப்பாக பந்து வீச அணி வெற்றி பெற்றது.

அதனால் ராஜஸ்தான் அணி மிகவும் போட்டியான அணியாக இருக்கும் என கருதப்பட்டது. அந்த அணி பின்னர் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

அந்த அணியின் ஜோப்ரா ஆர்ச்சர் மட்டும் சிறப்பாக பந்து வீசிய நிலையில் அவருக்குத் துணையாக துடுப்பாட்ட வீரர்கள் இருக்கவில்லை. பந்து வீச்சாளர்களும் இருக்கவில்லை. 14 போட்டிகளிலும் விளையாடிய ஆர்ச்சர் 20 இலக்குகள் வீழ்த்தி முதல் 6 பேர் பட்டியலில் உள்ளார். இவரது சிறப்பு அம்சமே ஒவருக்கு சராசரியாக 6.55 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்ததாகும். 55.4 பந்துகள் வீசி 365 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்துள்ளார். அதிகபட்சமாக 19 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 3 இலக்குகள் சாய்த்துள்ளார். (ற)



# கட்சி சின்னத்துடன் பிக்பாஸ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிய கமல்ஹாசன்

கமல்ஹாசன் தொகுத்து வழங்கும் பிக்பாஸ் - 4 கடந்த ஞாயிறு இரவு ஒளிபரப்பான நிகழ்ச்சியில் கமல்ஹாசன் கோட் ஒன்றை அணிந்திருந்தார்.

முழு நீளக் கைகள் வைத்து தைக்கப்பட்ட அந்தக் கோட்டின் கை பகுதியில் அவருடைய கட்சியின் சின்னமான ஒன்றுக்கொன்று இணைந்த 6 கைகள் சின்னம் சேர்த்து தைக்கப்பட்டு டிசைன் செய்யப்பட்டிருந்தது. கட்சி சார்பற்ற பல மக்கள் பார்க்கும் நிகழ்ச்சியில் இப்படி தன் கட்சியின் சின்னத்தை கமல்ஹாசன் அணியலாமா, பிக்பாஸ் நிகழ்ச்சிக் குழுவினரும், டிவி நிர்வாகத்தினரும் இதை எப்படி அனுமதித்தார்கள் என பலரும் கேள்வி எழுப்புகின்றனர். கமல்ஹாசன் மறைமுகமாக அவரது கட்சிக்கான பிரசாரத்தை பிக்பாஸ் நிகழ்ச்சி மூலம் ஆரம்பித்து விட்டாரோ ? என்று பலரும் கருத்துக்கள் முன்வைத்து வருகின்றனர்.

# வைரலாகும் சிம்புவின் போட்டோஷூட்





சிம்புவின் 46வது படத்தை சுசீந்திரன் இயக்கி வருகிறார். படத்துக்கு ஈஸ்வரன் என்று பெயர் வைத்துள்ளனர். இந்த படத்துக்காக சிம்பு தனது உடல் எடையை 20 கிலோ குறைத்து இருக்கிறார். சிம்பு மெலிந்த தோற்றத்துடன் இருக்கும் போஸ்டர் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய 5 மொழிகளில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்சால் 03.11.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.